<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>MCOP.No.421/2024</u>**

பெயர் : ஜெயலெட்சுமி

க/பெ. : இளங்கோவன்

தேதி : 27.07.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

விபத்தில் இறந்துபோன சுப்ரமணியனை எனக்கு நேரடியாக தெரியும் என்றால்சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட நான்கு சக்கர வாகனத்தின் கலர் மற்றும் மாடல் எனக்கு தெரியாது என்றால் ஞாபகம்இல்லை. இறந்துபோன சுப்ரமணியன் குடும்பத்தின் மூலம் எனக்கு ஆதாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை மனுதாரரின் வழக்கறிஞர் சொன்னார்,. இறந்துபோன சுப்ரமணியனிடம் நான் கடன் வாங்குவது வழக்கம். தற்போதும் கடன் நிலுவையில் உள்ளது. நான் விபத்தை நேரில் பார்த்தாக சாட்சியம் சொன்னால் கடனை தள்ளுபடி செய்கிறேன் என்று இறந்துபோன சுப்ரமணியனத்தின் மகன் சொன்னதாக நான் பொய்யாக சாட்சியம் சொல்லுகிறேன் என்றால்சரியல்ல. விபத்து நடந்த இடம் எனது வீட்டு வாசல் என்று சொல்லப்படுகிறது. போலீசில் நான் புகார் கொடுக்கவில்லை. விபத்தை நான் பார்த்ததாக சொல்லப்படும் நிலையில் நான் தான் புகார் கொடுத்திருக்க வேண்டும் என்று சொன்னால் அவரை தூக்கினேனே ஒழிய புகார் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு அப்போது வரவில்லை. விபத்து பற்றி எனக்கு எதுவும் தெரியாது. பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.